பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

இரண்டாவது பதிப்பின் முன்னுரை 27

முன்னுரை 29

1 மார்க்கத்தின் கடமைகள், சடங்குகள், ஹலால், ஹராம் விசயங்கள் ஆகியன நோக்கங்கள் அற்றும் இருக்கலாம் எனக் கூறுதல் 33

2 முஸ்லிமல்லாதவர்களுடன் நட்புறவாடுதல் 36

3 சிகரெட் பிடிப்பது தொடர்பான சட்டம் 39

4 ஆண்கள் பட்டாடை அணிவது ஹராமே 49

5 தாடியை விட்டுவிடுதல் தொடர்பான கட்டளை 51

6 மின்சாரம் பாய்ச்சிக் கொல்லப்படும் பிராணிகள் தொடர்பான கட்டளை 58

7 ஓவியம் வரைதல் தொடர்பான கட்டளை 65

8 பெண் அந்நிய ஆண்களுக்கு முன்னால் முகத்தையும் கைகளையும் காட்டுவது தொடர்பான சட்டம் 77

9 சதுரங்கம் (செஸ்) விளையாடுவது 100

10 பாடல், இசை தொடர்பான சட்டம் 109

11 பாடல் தடைசெய்யப்பட்டது என்பது தொடர்பாக இடம்பெற்றுள்ள மார்க்க அறிஞர்களின் கருத்துகள் 114

12 பாடல் அனுமதிக்கப்பட்டது என்பதற்கு ஆசிரியர் முன்வைக்கும் ஹதீஸுக்கான பதில் 123

13 பாடல் தடைசெய்யப்பட்டது என்பதற்கான ஆதாரங்களில் கர்ளாவீ முன்வைக்கும் ஆட்சேபனைகளும் அவற்றுக்கான பதில்களும் 128

14 மார்க்க அறிஞர்கள் பாடல் ஹராமானவற்றுடன் கலந்திருக்கிறது என்பதனால்தான் அதனைத் தடைசெய்தார்கள் என்ற கர்ளாவீயின் வாதமும் அதற்கான மறுப்பும் 131

15 லஹ்வுல் ஹதீஸ் என்றால் பாடல்தான் என்று அளிக்கப்படும் விளக்கத்திற்கு அவர் எழுப்பும் ஆட்சேபனையும் அதற்கான பதிலும் 134

16 பாடல் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படும் விசயத்தில் உதவி செய்யுமா? 138

17 சினிமா தொடர்பான கட்டளை 144

18 முடிவுரை 148

உதவிய நூல்கள் 151

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு

❀

பெயரும் பிறப்பும்

அவர்களின் பெயர், ஸாலிஹ். தந்தை ஃபவ்ஸான் இப்னு அப்துல் லாஹ் ஆலு ஃபவ்ஸான். தவாஸிர் கோத்திரம். ஷமாசிய்யா ஊரைச் சேர்ந்தவர்கள். பிறப்பு ஹிஜ்ரீ 1354 (கி.பி.1933).

வளர்ப்பும் ஆரம்பக் கல்வியும்

சிறு வயதிலேயே தந்தை மரணம். குடும்பத்தார் வளர்த்தார்கள். பள்ளிவாசல் இமாம் ஒருவரிடம் குர்ஆன் ஓதவும், எழுதப் படிக்க வும் கற்றார்கள். குர்ஆன் ஓதலில் (கிராஅத்) திறமைவாய்ந்தவர் (காரீ) அந்த இமாம். பிற்காலத்தில் அவர் தரிய்யா நகரின் (ரியாழுக்கு அருகிலுள்ள தர்இய்யா அல்ல; கசீம் பகுதியில் உள்ள தரிய்யா) நீதிபதி பொறுப்பில் அமர்த்தப்பட்டார். அவர்தாம் ஷெய்க் ஹமூது இப்னு சுலைமான் அத்தலால் ﷺ.

ஷமாசிய்யாவில் ஹிஜ்ரீ 1369 (கி.பி.1948)இல் ஒரு பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. அதில் சேர்க்கப்பட்டார்கள் ஸாலிஹ். பிறகு ஹிஜ்ரீ 1371 (1950)இல் புரைதாவிலுள்ள ஃபைசலிய்யா பள்ளியில் தொடக்கக்கல்வியை முடித்தார்கள். கொஞ்சக் காலம் மழலையர் பள்ளிக்கூடம் ஒன்றின் ஆசிரியராக பணிபுரிந்தார்கள். பிறகு புரைதாவில் இருந்த கல்வி நிறுவனத்தில், ஹி.1377 (1956)இல் பட்டப்படிப்பு முடித்தார்கள். பின்பு ஹி.1381 (1960) ரியாழிலுள்ள இமாம் முஹம்மது பல்கலைக் கழகத்தின் ஷரீஆ கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்தார்கள்.

மேற்படிப்பும் அவர்களின் கல்விப்பணியும்

ஃபிக்ஹ் துறையில் முதுகலைப் படிப்பை முடித்து, அதில் முனைவர் பட்டப் படிப்பையும் முடித்தார்கள். பிறகு ரியாழிலுள்ள கல்வி நிறுவனம் ஒன்றில் ஆசிரியர் பணி நியமனம் பெற்றார்கள். பின்பு

ஷரீஆ கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்து, அங்கு உயர்கல்வித் துறையில், மார்க்க அடிப்படைகளை (உசூலுத்தீன்) போதிக்கும் பணியில் அமர்த்தப்பட்டார்கள்.

பிறகு ஹிஜ்ரீ 1396இல் உச்சநீதி மன்ற நீதித்துறையின் தலைமை இயக்குநராக பொறுப்பேற்று, பொறுப்புக் காலம் நிறைவடையும் வரை அப்பணியைத் தொடர்ந்தார்கள்.

ஹிஜ்ரீ 1407இல் முத்த அறிஞர்கள் குழுவில் சேர்க்கப்பட்டார்கள். ஹிஜ்ரீ 1411இல் சஊதி அரசின் இஸ்லாமிய ஆய்வு மற்றும் ஃபத்வா ஆணையத்தின் (லஜ்னா அத்தாயிமா) அறிஞர்கள் குழுவில் உறுப்பினராகப் பணியமர்த்தப்பட்டு, இன்று வரை அப்பொறுப்பில் உள்ளார்கள். இது தவிர,

- மக்காவிலுள்ள ராபிதத்துல் ஆலமில் இஸ்லாம் அமைப்பின் அங்கமாகவுள்ள ஃபிக்ஹ் கமிட்டியின் உறுப்பினர்,
- ஹஜ்ஜுக்காலத்தில் இஸ்லாமிய வழிகாட்டல்களைப் போதிக்கும் அழைப்பாளர்கள் குழுவின் மேற்பார்வையாளர்,
- தற்போது ரியாழிலுள்ள மல்ஸர் பகுதியின் இளவரசர் முத்இப் இப்னு அப்துல் அஸீஸ் மஸ்ஜிதின் இமாம், கதீப், ஆசிரியர் போன்ற பொறுப்புகளில் இருக்கிறார்கள். மேலும்,
- சஊதி வானொலியின் நூர் அலத்தர்ப் (பாதையின்மீது வெளிச்சம்) நிகழ்ச்சியில் மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்கள்.
- கல்வி சார்ந்த பத்திரிகைகளில் வெளிவரும் ஆய்வுகள், கடிதங்கள், மார்க்கத் தீர்ப்புகளை மேற்பார்வை செய்யும் குழுவிலும் அங்கம் வகிக்கிறார்கள்.
- ஆய்வேடுகளைச் சமர்ப்பிக்கும் மாணவர்களின் முதுகலை மற்றும் முனைவர் பட்ட ஆய்வேடுகளை மேற்பார்வை செய்பவர்களாகவும் இருக்கிறார்கள்.
- அவர்களின் சொற்பொழிவுகள், வகுப்புகளில் கலந்துகொண்டு அறிஞர்களும் மாணவர்களும் பெரும்பலனை அடைகிறார்கள்.

அவர்களின் ஆசிரியப் பெருந்தகைகள்

அவர்களின் ஆசிரியர்களில் மிக முக்கியமானவர், பிரபலமானவர் இமாம் அப்துல் அஸீஸ் இப்னு பாஸ் ﵀. நமது ஷெய்க் ஸாலிஹின் கல்வித்திறனைப் பாராட்டுபவர்களாக, மிக முக்கிய விசயங்களில் அவர்களிடம் கருத்துக் கேட்பவர்களாக இப்னு பாஸ் ﵀ இருந்தார்

கள். சில புத்தகங்களை மதிப்புரைக்காக அனுப்பியும் வைப்பார்கள். இன்னொரு ஆசிரியர் ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு ஹுமைது ﵀. புரைதாவில் ஷெய்க் ஸாலிஹ் படித்துக்கொண்டிருந்த காலத்தில் அங்குள்ள பெரிய பள்ளிவாசலில் இமாமாக இருந்தார் இப்னு ஹுமைது. அவர்களின் வகுப்புகளில் தவறாமல் கலந்துகொள்வார் கள் ஸாலிஹ். இவர்கள் அல்லாமல், இன்னும்

- ஷெய்க் முஹம்மது அல்அமீன் அஷ்ஷன்கீத்தீ ﵀
- ஷெய்க் அப்துர் ரஸ்ஸாக் அல்அஃபீஃபீ ﵀
- ஷெய்க் ஸாலிஹ் இப்னு அப்துற் றஹ்மான் அஸ்ஸுகைத்தீ
- ஷெய்க் ஸாலிஹ் இப்னு இப்றாஹீம் அல்புலைஹீ
- ஷெய்க் முஹம்மது இப்னு சுபையல்
- ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு ஸாலிஹ் அல்குலைஃபீ
- ஷெய்க் இப்றாஹீம் இப்னு உபைது அல்அப்த் அல்முஹ்சின்
- ஷெய்க் ஸாலிஹ் அல்அலீ அந்நாசிர்

இவர்களிடமும் எகிப்திலுள்ள அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் அறிஞர்களில் ஹதீஸ், தஃப்சீர் மற்றும் அறபுமொழி துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களிடமும் சென்று கற்றார்கள்.

அவர்கள் எழுதிய புத்தகங்கள்

ஷெய்க் ஸாலிஹ் அல்ஃபவ்ஸான் நிறைய புத்தகங்களை எழுதி யுள்ளார்கள். அவற்றில் பிரபலமானவை:

1. அத்தஹ்கீகாத் அல்மர்தியா (التحقيقات المرضية في المباحث الفرضية) - வாரிசுரிமைச் சட்டங்கள் குறித்த முதுகலை ஆய்வேடு
2. அஹ்காம் அல்அத்இமா ஃபீ அஷ்ஷரீஆ அல்இஸ்லாமியா (أحكام الأطعمة في الشريعة الإسلامية) - இஸ்லாமிய மார்க்கத்தில் உணவுகள் குறித்த சட்டங்கள் எனும் முனைவர் ஆய்வேடு
3. அல்இர்ஷாத் இலா ஸஹீஹ் அல்இஃதிகாத் (الإرشاد إلى صحيح الاعتقاد) - சரியான நம்பிக்கைக்கான நேர்வழி
4. ஷரஹ் அல்அகீதா அல்வாசித்தியா (شرح العقيدة الواسطية) - இப்னு தைமிய்யாவின் அல்அகீதா அல்வாசித்தியா விரிவுரை
5. அல்பயான் ஃபீமா அக்தஃ ஃபீஹி ஃபஅள் அல்குத்தாப் (البيان فيما أخطأ فيه بعض الكتاب) - எழுத்தாளர்கள் சிலரின் தவறுகள் குறித்த விளக்கம்

2

முஸ்லிமல்லாதவர்களுடன் நட்புறவாடுதல்

❀

47ஆவது பக்கத்தில் ஆசிரியர் கூறுகிறார்:

'வேதக்காரர்களுடன் உணவருந்தியும் ஒப்பந்தங்கள் செய்தும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்தும் நட்புகொள்ளும்படி நமக்கு விதிக்கப்பட்டுள்ளது.'

அவரே பின்வரும் கேள்விகளைக் கேட்டுள்ளார்:

'முஸ்லிமல்லாதவர்களுடன் எப்படி அன்புடனும் நன்னடத்தையுடனும் இருக்க முடியும்? நிராகரிப்பாளர்களுடன் நட்புகொள்ள வேண்டாம் என்றும் அவர்களை நெருங்கிய நண்பர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டாம் என்றும் திருக்குர்ஆன் தடுக்கிறதே?'

பிறகு இந்தக் கேள்விக்குப் பதிலாகக் கூறுகிறார்:

'இந்த வசனங்களில் வந்துள்ள தடையை அப்படியே பொதுவாகக் கொள்ள முடியாது. அது யூதர்கள், கிறித்துவர்கள், நிராகரிப்பாளர்கள் அனைவரையும் குறிக்கக்கூடியதல்ல. அவ்வாறு நாம் புரிந்துகொண்டால் நல்லவர்கள், அவர்கள் எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள் என்று வேறு வசனங்கள் முன்வைக்கும் கருத்தோடு முரண்படக்கூடியதாக ஆகிவிடும். இந்த வசனங்கள் இஸ்லாமை எதிர்த்து போரிடக்கூடிய நிராகரிப்பாளர்களின் விசயத்தில் இறங்கியவையாகும்.'

இந்தக் கருத்துக்கு இரண்டு வகைகளில் நாம் மறுப்பு கூறுகிறோம்:

ஒன்று: நிராகரிப்பாளர்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள் என்று கூறக்கூடிய வசனங்கள் 'அல்மும்தஹினா' என்ற அத்தியாயத்தில் இடம்பெற்றவையாகும். குர்ஆன் விரிவுரையாளர்களில் சிலர் இந்த வசனங்களை (مَنْسُوخٌ) 'மன்சூக்' (அதன் கட்டளை நீக்கப்பட்டுவிட்டது) என்று கூறுகிறார்கள்.

இமாம் குர்துபீ ﵀ கூறுகிறார்: 'யார் நம்பிக்கையாளர்களுடன் போரிடவில்லையோ அவர்களுடன் நட்பு கொள்வதற்கு இது அனுமதியளிக்கிறது.' இப்னு சைய்து ﵀ கூறுகிறார்: 'இந்த அனுமதி இஸ்லாமின் ஆரம்பக்கட்டத்தில் இருந்தது. போருக்கான கட்டளை இடப்பட்ட பிறகு அது நீக்கப்பட்டுவிட்டது.' கதாதா ﵀ கூறுகிறார்:

فَاقْتُلُوا الْمُشْرِكِينَ حَيْثُ وَجَدْتُمُوهُمْ

'இணைவைப்பாளர்களை எங்குக் கண்டாலும் அவர்களைக் கொல்லுங்கள்' (குர்ஆன் 9:5)

என்கிற இந்த வசனம் அந்த அனுமதியை நீக்கிவிட்டது. 'இந்த அனுமதி ஒரு நோக்கத்திற்காகவே வழங்கப்பட்டிருந்தது. அது சமாதான உடன்பாடாகும். மக்கா வெற்றிக்குப் பிறகு அது நீக்கப்பட்டுவிட்டது. அதன் ஒதுதல் மட்டும் நீடித்துவிட்டது' என்று சொல்லப்படுகிறது.

இப்னு ஜரீர் ﵀ கூறுகிறார்: 'இது ஹிஜ்ரத் செய்யாத நம்பிக்கையாளர்களுக்கு மட்டுமே உரிய அனுமதியாகும்.'

இந்த இரண்டு கருத்துகளிலிருந்தும் தெரிய வருவது, ஒன்று அந்த வசனத்தின் கட்டளை நீக்கப்பட்டுவிட்டது அல்லது அது ஹிஜ்ரத் செய்யாத நம்பிக்கையாளர்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட அனுமதியாகும். இதற்கும் நிராகரிப்பாளர்களுடன் நட்பு கொள்வதை தடை செய்யும் வசனங்களுக்கும் மத்தியில் எந்த முரண்பாடும் இல்லை.

இரண்டு: 'மும்தஹினா என்ற அத்தியாயத்தில் இடம்பெறும் வசனம் மன்சூக் (مَنْسُوخٌ) இல்லை அல்லது ஹிஜ்ரத் செய்யாத நம்பிக்கையாளர்களுக்கு மட்டும் உரியது இல்லை என்று வைத்துக் கொண்டாலும் அதில் அந்த நூலாசிரியர் கூறுவதுபோன்று நிராகரிப்பாளர்களுடன் அன்பாக நடந்துகொள்வதற்கான ஆதாரம் இல்லை. அந்த அனுமதி நிராகரிப்பாளர்களுடன் நாம் கொள்ளும் ஒரு வகையான தொடர்பைக் குறிக்கிறது. அவர்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்வது அவர்களின் செயல்பாடுகளுக்கு நாம் அளிக்கும் பிரதி உபகாரம் என்ற அடிப்படையிலாகும். இது உள்ளங்களில் அவர்களை நேசிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதல்ல.

ஹாஃபிள் இப்னு ஹஜர் ﵀ தம்முடைய 'ஃபத்ஹுல் பாரீயில் (5/233) கூறுகிறார்: 'அவர்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ள

4

ஆண்கள் பட்டாடை அணிவது ஹராமே

❀

65ஆவது பக்கத்தில் கர்ளாவீ கூறுகிறார்:

الذَّهَبُ وَالْحَرِيْرُ الْخَالِصُ حَرَامٌ عَلَى الرِّجَالِ

'தங்கமும் தூய பட்டாடையும் ஆண்களுக்குத் தடைசெய்யப்பட்டதாகும்.'

இதே கருத்தை அவர் அதே பக்கத்தில் மீண்டும் கூறுகின்றபோது 'தூய பட்டாடை' (الْحَرِيْرُ الْخَالِصُ) என்ற வார்த்தையைப் பயன்படுத்து கிறார். அதிலிருந்து தூய பட்டாடை அல்லாதது, அதாவது அத னோடு வேறு ஏதாவது கலந்திருந்தால் அது ஹராம் அல்ல என்று புரிந்துகொள்ளப்படுகிறது. இது தெளிவான தவறாகும். இதற்கு விரிவான விளக்கம் அவசியமாகிறது. தூய பட்டாடை அல்லாதது பின்வரும் இரண்டு நிலைகளைத் தவிர்த்து வேறு ஒன்றாக இருக்காது:

ஒன்று: அதில் பட்டுதான் மிகைத்திருக்கும். அதற்கான சட்டம் தூய பட்டாடையின் சட்டம்தான். அது ஆண்களுக்குத் தடை செய்யப்பட்டதாகும்.

இரண்டு: பட்டு மற்றவற்றோடு கலந்து குறைவாக இருப்பதாகும். பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்துப்படி, அது ஆண் களுக்கு அனுமதிக்கப்பட்டதாகும். இப்னு தகீகுல் ஈத், ஷவ்கானீ இருவரும் நான்கு விரல்கள் அளவுக்கு குறைவாக இருந்தாலே தவிர இந்த நிலையிலும் அது தடைசெய்யப்பட்டது என்று கூறுகிறார்கள்.

ஹாஃபிள் 'அல்ஃபத்ஹ்' என்ற நூலில் (10-294) கூறுகிறார்: ஆடையில் பட்டு குறைவான அளவில் கலந்திருந்து வேறு பொருட் கள் அதிக அளவில் கலந்திருந்தால் அதனை அணியலாம் என்றே பெரும்பான்மையான அறிஞர்கள் கூறுகிறார்கள். இது குறித்து அவர்களின் ஆதாரம் பட்டு கலந்திருக்கும் ஒரு வகையான ஆடை தொடர்பாக வந்திருக்கும் ஹதீஸும் பட்டு கலந்திருக்கும் ஆடைக்கு

அனுமதி வழங்கும் உமருடைய ஹதீஸும் ஆகும். இப்னு தகீகுல் ஈத் ﷺ கூறுகிறார்: 'அது மூலப்பொருளில் செய்யப்பட்ட கியாஸ் (கருத்தாய்வு) ஆகும். அது ஒவ்வொரு கலவையும் அனுமதிக்கப் பட்டது என்ற பொருளைத் தராது. அது அதன் மொத்த அளவில் நான்கு விரல்கள் அளவு பட்டாடை இருந்தால் மட்டுமே அனுமதி என்ற பொருளையே தருகிறது. அது மற்ற பொருளோடு கலக் காமல் தனியாக இருந்தாலும் சரியே. இந்த விதிவிலக்குத் தவிர்த்து தூய பட்டாடை, கலப்புப் பட்டாடை இரண்டுமே தடைசெய்யப் பட்டதாகும்.'

ஷவ்கானீ ﷺ 'நீலுல் அவ்தார்' என்ற நூலில் (1-94) கூறுகிறார்: 'பட்டாடை - அது தனியாக இருந்தாலும் பிறவற்றோடு கலந் திருந்தாலும் சரியே - தடை தொடர்பாக வந்துள்ள ஹதீஸ்கள், நான்கு விரல்கள் அளவு இருந்தால் தவிர மற்றவை அனைத்தும் தடைசெய்யப்பட்டுள்ளன என்ற பொருளையே தருகின்றன. அது குறிப்பிட்ட பகுதியில் சேர்ந்து இருந்தாலும் சரியே அல்லது ஆடையில் கலந்து பிரிந்திருந்தாலும் சரியே. இப்னு அப்பாஸ் ﷺ அவர்களுடைய ஹதீஸ் கூறுகிறது:

إِنَّمَا نَهَى رَسُولُ اللَّهِ -صلى الله عليه وسلم- عَنِ الثَّوْبِ الْمُصْمَتِ مِنَ الْحَرِيرِ

'தூய பட்டாடையை நபியவர்கள் தடைசெய்தார்கள்.' (அபூதா வூத் 4055, அல்இர்வாஉ 279)

வெளிரங்கமாக, உள்ரங்கமாக பட்டு வைத்து தைக்கப்பட்டிருந்தால் அதனால் எந்தத் தீங்கும் இல்லை என்று இப்னு அப்பாஸ் ﷺ கூறுகிறார். நான் அறிந்தவரை இந்தப் பொதுவான அம்சத்தை குறிப் பானதாக ஆக்க முடியாது. இப்னு அப்பாஸின் இந்த அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டே பெரும்பான்மையான அறிஞர்கள் பட்டு குறைந்த அளவில் கலந்திருந்தால் அனுமதிக்கப்பட்டதுதான் என்று கூறுகிறார்கள். நியாயவான்களே, நாம் இந்த விசயத்தில் தெளிவான இந்த ஹதீஸ்களுக்கு முன்னால் பலவீனமான ஹதீஸை ஆதாரமாகக்கொள்ள முடியுமா? அல்லாஹ் இப்னு தகீகுல் ஈதின் மீது கருணை காட்டுவானாக. அல்லாஹ் இந்த விசயத்தில் அவ ரைக் கொண்டு நபியவர்களின் சமூகம் ஒட்டுமொத்தமாக தவறி ழைப்பதைவிட்டும் பாதுகாத்தான்.'

5

தாடியை விட்டுவிடுதல் தொடர்பான கட்டளை

❀

பிறகு அந்த நூலாசிரியர் 81ஆவது பக்கத்தில் தாடியை விட்டுவிடுதல் தொடர்பாகப் பேசியுள்ளார். இந்த விசயத்திலும் அவரிடம் தவறுகள் நிகழ்ந்துள்ளன. அவற்றை உங்களுக்கு இங்கு தெளிவு படுத்துகின்றோம்:

> முதல் தவறு: 'தாடியை விட்டுவிடுதல் என்றால் அதே நிலையில் அப்படியே விட்டுவிடுதல் அல்ல. அப்படி விட்டுவிட்டால் நீளமாக வளர்ந்து அந்த மனிதருக்குத் தொந்தரவளிக்கும் ஒன்றாக அது ஆகிவிடும். மாறாக திர்மிதீயில் வந்துள்ள ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளதுபோன்று, நம்முடைய ஸலஃபுகளில்[4] சிலர் செய்ததுபோன்று அதன் நீள, அகலத்தைக் கொஞ்சம் வெட்டிக்கொள்ள வேண்டும்.'

நாம் கூறுகிறோம்: தாடியை விட்டுவிடுதல் என்றால் அதே நிலையில் அப்படியே தாடியை விட்டுவிடுதல்தான். ஸஹீஹான ஹதீஸ்கள்

---

4 ஸலஃப்: முன்சென்றோர். ஸாலிஹ் என்றால் நல்லோர். நல்ல முன்னோர்கள் எனும் பொருளில் அஸ்ஸலஃப் அஸ்ஸாலிஹ் / ஸலஃபுஸ்ஸாலிஹீன் என்று கூறப்படும். இச்சொற்கள் நபித்தோழர்களையும் அவர்களைப் பின்பற்றிய தாபிஈன், தபஉ தாபிஈன் ஆகிய மூன்று தலைமுறைகளைக் குறிப்பிடுகிறது. இவர்களை நபியவர்கள் மனிதர்களில் சிறந்தவர்கள் எனப் புகழ்ந்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் மார்க்கத்தில் எந்தப் புதுமைகளையும் (பித்அத்) ஏற்படுத்தாமல் நேரான பாதையில் நிலைத்திருந்தார்கள். எனவே, இவர்கள் எப்படி இஸ்லாமைப் புரிந்து பின்பற்றினார்களோ, அப்படியே நாமும் பின்பற்ற வேண்டும் என்பதை உணர்த்தவே ஸலஃப் கொள்கையைப் பின்பற்றும்படி வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறு பின்பற்றுவதே சரியான மார்க்கம் என்று நம்பிச் செயல்படுபவரையே ஸலஃபீ எனப்படும். அதாவது, ஸலஃபைப் பின்பற்றுகிறவர். இப்படி அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையிலும் வழிமுறையிலும் உறுதியாக உள்ளவர்களையே நாம் ஸலஃபீ என்கிறோம்.

7

ஓவியம் வரைதல் தொடர்பான கட்டளை

❀

பிறகு அவர் அந்த நூலில் 72ஆம் பக்கத்திலிருந்து 82ஆம் பக்கம் வரை ஓவியம் வரைதல் தொடர்பாகப் பேசுகிறார். இந்த விசயத்திலும் அவர் பல தவறுகள் இழைத்துள்ளார். அவற்றைப் பின்வருமாறு நாம் தெளிவுபடுத்துகின்றோம்:

முதல் தவறு: அதனை மூன்றாக வகைப்படுத்தியுள்ளார். முதல் வகை ஹராம் என்றும், இரண்டாம் வகை மக்ரூஹ் என்றும், மூன்றாம் வகை அனுமதிக்கப்பட்டது என்றும் அவர் கூறுகிறார். சிலைகளை உருவாக்குவது முதல் வகையில் உள்ளடங்கும் என்றும், சுவர்களிலும் பலகைகளிலும் தாள்களிலும் சித்திரங்கள் வரைவது இரண்டாம் வகையில் உள்ளடங்கும் என்றும், போட்டோ எடுப்பது மூன்றாம் வகையில் அடங்கும் என்றும் அவர் கூறுகிறார்.

முதலில் இந்தப் பங்கீடே தவறானது. ஸஹீஹான ஹதீஸ்களுக்கு எதிரானது. சிலைகளாக இருந்தாலும் சித்திரங்களாக இருந்தாலும் போட்டோக்களாக இருந்தாலும் அனைத்தும் ஹராம்தான். யார் இதற்கு மாறாகக் கூறுகிறாரோ அவர் அதற்கான ஆதாரங்களை முன்வைக்க வேண்டும்.

'அம்லாமுல் முவக்கியீன்' என்ற நூலில் (4-403) பெரும் பாவங்கள் என்ற தலைப்பில் பேரறிஞர் இப்னுல் கய்யிம்[7] ﷺ விலங்குகளின்

---

7 இப்னுல் கய்யிம்: முஹம்மது இப்னு அபூபக்ர் என்பது இயற்பெயர். ஹிஜ்ரீ 691 (கி.பி. 1292) ஸஃபர் 7 அன்று டமாஸ்கஸில் பிறப்பு. ஏழு வயதிலிருந்தே அறிஞர்களின் சபைகளில் கல்வி தேடி அமர்ந்தார்கள். மார்க்க அறிஞராகிய தம் தந்தையிடமும், அக்காலத்தில் கல்விக்குப் பேர்போன சுமார் இருபத்தைந்து அறிஞர்களிடமும் கற்றார்கள். ஹிஜ்ரீ 712 (கி.பி. 1312)இல் இமாம் இப்னு தைமிய்யாவைச் சந்தித்து, அவர்கள் மரணித்த ஹிஜ்ரீ 728 வரை அவர்களுடனே தங்கியிருந்து கல்வி பெற்றார்கள். இமாம்கள் இப்னு கஸீர்,

படங்கள் வரைவதையும் - அவற்றுக்கு நிழல் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரியே - சேர்த்துக் கூறியுள்ளார்.

ஸஹீஹ் முஸ்லிமுக்கான விளக்கவுரையில் (14-18) இமாம் நவவீ ﵀ கூறுகிறார்: 'இந்த விசயத்தில் எதற்கு நிழல் இருக்கிறதோ அதற்கும், எது நிழலுடன் இல்லையோ அதற்கும் மத்தியில் எந்த வேறுபாடும் இல்லை. இதுதான் இந்த விசயத்தில் நம்முடைய கருத்து. நபித்தோழர்களில், தாபிஈன்களில், அவர்களுக்குப் பின்வந்தவர்களில் பெரும்பாலான அறிஞர்கள் இப்படித்தான் கூறியுள்ளார்கள். இதுதான் ஸவ்ரீ, மாலிக்[8], அபூ ஹனீஃபா[9] ﵃ ஆகியோரின் கருத்துமாகும். எந்தப் படத்திற்கு நிழல் இருக்கிறதோ அதுதான் தடைசெய்யப்பட்டது, எந்தப் படத்திற்கு நிழல் இல்லையோ அது தடைசெய்யப்பட்டதல்ல என்று கூறுவது தவறான கருத்தாகும். படம் வரையப்பட்டிருந்த ஒரு திரையை நபியவர்கள் கண்டித்தார்கள். அந்தப் படத்திற்கு நிழல் இருக்கவில்லை.

இப்னு ரஜப் அல்ஹன்பலீ, அத்தஹபீ, இப்னு அப்துல் ஹாதீ, தகீய்யுத்தீன் அஸ்ஸுபுகீ ﵃ போன்றோர் இவரின் மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். வணக்க வழிபாடுகளில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்ட இமாமவர்கள். ஹிஜ்ரீ 751 (கி.பி. 1350) ரஜப் 13இல் மரணித்தார்கள்.

8 இமாம் மாலிக் இப்னு அனஸ் இப்னு மாலிக் இப்னு அபூஆமிர் ﵀, ஹிஜ்ரீ 94 (கி.பி. 717)இல் மதீனாவில் பிறந்தார்கள். முப்பாட்டனார் அபூஆமிர் ﵁ மூத்த நபித்தோழர். இமாமவர்கள் மதீனா அறிஞர்களான இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ, அப்துல்லாஹ் இப்னு உமர் ﵁ அவர்களால் விடுவிக்கப்பட்ட அடிமை நாஃபிஃ ﵀ ஆகியோரிடம் ஹதீஸ்களைக் கற்றார்கள். இவர்கள் தொகுத்த 'முவத்தா' எனும் ஹதீஸ் தொகுப்பு மிகவும் பிரசித்தி பெற்றது. இமாம் ஷாஃபிஈ ﵀ இவர்களின் மாணவர். ஹிஜ்ரீ 179 ரபீஉல் அவ்வல் 14இல் தம் 85ஆம் வயதில் மதீனாவில் மரணித்தார்கள்.

9 அபூ ஹனீஃபா: நுஃமான் இப்னு ஸாபித் என்பது இயற்பெயர். ஹிஜ்ரீ 80 (கி.பி. 703)இல் இராக் நாட்டு கூஃபா நகரில் பிறப்பு. ஆரம்பத்தில் தத்துவக்கலையை அதிகம் கற்றாலும், பின்னர் அதனை வெறுத்து ஒதுக்கிவிட்டு, ஹதீஸ் மற்றும் ஃபிக்ஹை தாபிஈ ஹம்மாது இப்னு ஸைது ﵀ அவர்களிடம் பதினெட்டு வருடங்கள் கற்றார்கள். கல்வியில் பேரறிவுடைய இவர்களை உயர்நீதிபதியாக நியமிக்க கலீஃபா அபூ ஜஅஃபர் அல்மன்சூர் விரும்பினார். ஆனால், இமாமவர்கள் அதை ஏற்க மறுத்தார்கள். அதனால் சிறையிலிடப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள். ஹிஜ்ரீ 150 (கி.பி. 767)இல் சிறையில் மரணித்தார்கள்.

ஹாஃபிள் இப்னு ஹஜர் ﵀ 'ஃபத்ஹுல் பாரீ'யில் (10-384) நவவீயின் கருத்தைக் குறிப்பிட்ட பிறகு கூறுகிறார்: எது நிழலுடன் வரையப்பட்டுள்ளதோ, எது நிழலின்றி வரையப்பட்டுள்ளதோ என அனைத்தும் அஹ்மது என்ற ஹதீஸ் நூலில் வந்திருக்கும் பின்வரும் ஹதீஸின்படி தடைசெய்யப்பட்டதாகும்:

أَيُّكُمْ يَنْطَلِقُ إِلَى الْمَدِينَةِ فَلا يَدَعُ بِهَا وَثَنًا إِلاَّ كَسَرَهُ وَلا صُورَةً إِلاَّ لَطَخَهَا

'உங்களில் யாராவது மதீனாவிற்குச் சென்றால் அவர் எந்தச் சிலையையும் உடைக்காமல் எந்த ஓவியத்தையும் கிழிக்காமல் விட்டுவிட வேண்டாம்.' (அறிவிப்பு: அலீ ﵁, அஹ்மது 657)[10]

இந்த ஹதீஸின் தொடர்ச்சியாக இடம்பெறுகிறது,

مَنْ عَادَ إِلَى صَنْعَةِ شَيْءٍ مِنْهُ فَقَدْ كَفَرَ بِمَا أُنْزِلَ عَلَى مُحَمَّدٍ صلى الله عليه وسلم

'யார் இதுபோன்ற ஒரு செயலைச் செய்யாமல் திரும்பிவிட்டாரோ அவர் முஹம்மது மீது இறக்கப்பட்டதை நிராகரித்துவிட்டார்.'

ஹாஃபிள் இப்னு ஹஜர் ﵀ ஃபத்ஹுல் பாரீயில் (10-390) அன்னை ஆயிஷாவின்

إِنَّ أَصْحَابَ هَذِهِ الصُّوَرِ يُعَذَّبُونَ يَوْمَ الْقِيَامَةِ

'இந்த ஓவியங்களை வரைந்தவர்கள் மறுமை நாளில் வேதனை செய்யப்படுவார்கள்' (புகாரீ 5181)

என்ற ஹதீஸிற்கு விளக்கம் அளித்தவராகக் கூறுகிறார்: 'இந்த ஹதீஸிலிருந்து தெரிய வருவது, ஓவியங்கள் நிழலுடன் இருந்தாலும் நிழல் அற்றவையாக இருந்தாலும் அவை கல்லில் செதுக்கப் பட்டிருந்தாலும் அல்லது ஆடையில் பின்னப்பட்டிருந்தாலும்

---

10 'உங்களில் யாராவது மதீனாவிற்குச் சென்றால் அவர் எந்தச் சிலையையும் உடைக்காமல் எந்த ஓவியத்தையும் கிழிக்காமல் விட்டுவிட வேண்டாம்' என்று நபியவர்கள் கூறியபோது, ஒரு மனிதர் 'நான் செல்கிறேன்' என்றார். பிறகு அவர் மதீனாவாசிகளுக்குப் பயந்து அவ்வாறு செய்யாமல் திரும்பிவிட்டார். பிறகு அலீ ﵁ அவர்கள், 'நான் செல்கிறேன்' என்று கூறி சிலைகளை உடைத்துவிட்டு, ஓவியங்களைக் கிழித்துவிட்டு திரும்பிவந்தார். அந்தச் சமயத்தில்தான் நபியவர்கள், 'யார் இது போன்ற ஒரு செயலைச் செய்யாமல் திரும்பிவிட்டாரோ அவர் முஹம்மதுமீது இறக்கப்பட்டதை நிராகரித்துவிட்டார்' என்று கூறினார்கள். (மொ.கு.)

8

பெண் அந்நிய ஆண்களுக்கு முன்னால் முகத்தையும் கைகளையும் காட்டுவது தொடர்பான சட்டம்

❀

அந்தப் புத்தகத்தின் 112ஆவது பக்கத்தில் ஆசிரியர் கூறுகிறார்:

'ஒரு பெண் அந்நிய ஆணுக்கு முன்னால் தம்முடைய முகத்தையும் கைகளையும் தவிர உடலின் அனைத்துப் பாகங்களையும் மறைத்துக் கொள்ள வேண்டும்.'

113ஆவது பக்கத்தில் அவர் கூறுகிறார்:

'ஓர் ஆண் பெண்ணின் முகத்தையோ கைகளையோ இச்சையின்றி அல்லது குழப்பத்தில் விழுந்துவிடுவேன் என்ற பயம் இல்லையெனில் பார்ப்பது அனுமதிக்கப்பட்டதாகும்.'

115ஆவது பக்கத்தில் கூறுகிறார்:

وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا لِبُعُولَتِهِنَّ أَوْ آبَائِهِنَّ

'அந்தப் பெண்கள் தங்களுடைய கணவர்களுக்கு அல்லது தந்தையருக்கு முன்னாலே தவிர தங்கள் அழகை வெளிப் படுத்தக்கூடாது.' (குர்ஆன் 24:31)

இது நம்பிக்கைகொண்ட பெண்கள் தங்களின் மறைவான அழகை வெளிப்படுத்தக் கூடாது என்று கட்டளையைக் கொண்டுள்ளது. உதாரணமாக, காது, முடி, மார்பு, கெண்டைக்கால் ஆகியவற்றின் அலங்காரம். அந்நிய ஆண்களுக்கு முன்னால் முகத்தையும் கைகளையும் வெளிப்படுத்துவதற்கு அனுமதி இருக்கிறது.

إِلَّا مَا ظَهَرَ مِنْهَا

'தங்களிடமிருந்து வெளிப்படுவதைத் தவிர' (குர்ஆன் 24:31)

என்ற வாசகமே அதற்கான ஆதாரமாகும். அன்னை ஆயிஷாவின் பின்வரும் ஹதீஸிலிருந்தும் பெண்ணின் முகத்தையும் கைகளையும் ஓர் அந்நிய ஆண் பார்க்கலாம் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது என்று அவர் கூறுகிறார்:

أَنَّ أَسْمَاءَ بِنْتَ أَبِي بَكْرٍ دَخَلَتْ عَلَى رَسُولِ اللَّهِ -صلى الله عليه وسلم- وَعَلَيْهَا ثِيَابٌ رِقَاقٌ فَأَعْرَضَ عَنْهَا رَسُولُ اللَّهِ -صلى الله عليه وسلم- وَقَالَ « يَا أَسْمَاءُ إِنَّ الْمَرْأَةَ إِذَا بَلَغَتِ الْمَحِيضَ لَمْ تَصْلُحْ أَنْ يُرَى مِنْهَا إِلاَّ هَذَا وَهَذَا». وَأَشَارَ إِلَى وَجْهِهِ وَكَفَّيْهِ

'அன்னை ஆயிஷாவின் சகோதரியான அஸ்மா பின்த் அபூ பக்ர் மெல்லிய ஆடை உடுத்திக்கொண்டு நபியவர்களைக் காண வந்தார். அப்போது நபியவர்கள் அவளிடம் கூறினார்கள், 'அஸ்மாவே, ஒரு பெண் பருவமடைந்துவிட்டால் முகத்தையும் மணிக்கட்டு வரை கைகளையும் தவிர அவளிடமிருந்து வேறு எதுவும் வெளிப்படுவது உகந்தது அல்ல.' (அபூதாவூத் 4104)

இந்த ஹதீஸ் பலவீனமானது. ஆனால், முகத்தையும் மணிக்கட்டு வரை கைகளையும் காட்டலாம் என்பதற்கு அனுமதியளிக்கும் பிற ஸஹீஹான ஹதீஸ்கள் இதனை வலுப்படுத்துகின்றன. பிறகு அவர் கூறுகிறார்:

أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم حِينَ وَجَدَ الْفَضْلَ بْنَ عَمِّهِ العَبَّاسِ يَنْظُرُ إِلَى امْرَأَةٍ أَجْنَبِيَّةٍ حَسْنَاءَ وَيَطِيلُ الْإِلْتِفَاتَ اِلَيْهَا وَكَانَ رَدِيفُ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَجَعَلَ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَصْرِفُ وَجْهَهُ إِلَى الشِّقِّ الآخَرِ وَقَالَ رَأَيْتُ شَابًا وَشَابَّةً فَلَمْ آمَنْ عَلَيْهِمَا الْفِتْنَةَ

'நபியவர்களுக்குப் பின்னால் இருந்த ஃபழ்ல் இப்னு அப்பாஸ் ஓர் அழகான அந்நியப் பெண்ணை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தபோது நபியவர்கள் அவரது முகத்தை வேறு பக்கம் திருப்பினார்கள். மேலும், கூறினார்கள், ஓர் இளைஞனையும் இளைஞியையும் கண்டேன். அவர்கள் இருவரின் மீதும் குழப்பத்தை நான் அஞ்சினேன்.' (அறிவிப்பு: இப்னு அப்பாஸ் ؓ, புகாரீ 1513, முஸ்லிம் 1334, நஸயீ 2642, அபூதாவூத் 1809, அஹ்மது 1/251 தாரமீ 1833)

நான் கூறுகிறேன்: 'இந்த ஆய்வில் நூலாசிரியரிடமிருந்து ஏராளமான தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன.

ஒன்று: அந்நிய ஆண்களுக்கு முன்னால் ஒரு பெண் முகத்தையும் தன் இரு கைகளையும் மணிக்கட்டு வரை வெளிப்படுத்தலாம் என்று

10

பாடல், இசை தொடர்பான சட்டம்

❀

அந்த நூலாசிரியர் பாடல், இசை தொடர்பாக 218ஆவது பக்கத்திலிருந்து 221ஆவது பக்கம் வரை பேசியுள்ளார். அதில் அவர் பல விசயங்களில் சரியானதிலிருந்து விலகியுள்ளார். அவற்றில் ஒன்று:

> உள்ளங்களில் அமைதியை, மகிழ்ச்சியை உண்டாக்கும், செவிகளில் இனிமையை ஏற்படுத்தும் பொழுதுபோக்குகளில் பாடலும் ஒன்றாகும். அதில் ஆபாசமான, அருவருப்பான வார்த்தைகளோ, பாவத்தின் பக்கம் தூண்டுதலோ இல்லையெனில் இஸ்லாம் அதனை அனுமதித்துள்ளது. பெரிய அளவில் உணர்ச்சியைத் தூண்டாத இலேசான இசையை அதனுடன் இணைத்துக் கொள்ளலாம். மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்விதமாகவும் உள்ளங்களில் அமைதியை ஏற்படுத்தும்விதமாகவும் அது அமைந்துள்ளது. பெருநாள், திருமணம், காணாமல் போனவர் திரும்பி வருதல், வலீமாக, அகீகா, குழந்தை பிறப்பு போன்ற சந்தர்ப்பங்களில் அது இடம்பெறலாம்.'

இந்த வாசகங்களில் பல விசயங்கள் கவனிக்கத்தக்கவை.

ஒன்று: உள்ளங்களில் அமைதியை, மகிழ்ச்சியை பாடல் ஏற்படுத்தும் என்றும், செவிகளுக்கு இனிமையை அளிக்கும் என்றும் அவர் வர்ணித்திருப்பது மக்களுக்கு அதனை அழகாக்கிக் காட்டுவதற்காகவும் அதனைக் கேட்பதற்கு அவர்களைத் தூண்டுவதற்காகவும்தான். நாம் கூறுகிறோம், ஒன்றை அனுமதிக்கப்பட்டது என்று கருதுவதற்கு அதன் தீங்குகள் எதையும் கவனத்தில் கொள்ளாமல் அது உள்ளத்திற்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் தரக்கூடியதாக இருக்கிறது என்பது மட்டும் போதுமானதா என்ன? பெரும்பாலான உள்ளங்கள் தவறான விசயத்தின் பக்கம் சாய்கின்றன. அதனால் அமைதியடைகின்றன. அவ்வாறு எனில் நாம் அதனை ஹலால் என்று கூறலாமா? ஒருபோதும் இல்லை.

பேரறிஞர் இப்னுல் கய்யிம் ﵀ தம்முடைய 'மதாரிஜுஸ் ஸாலிகீன்' என்ற நூலில் (1-491) கூறுகிறார்: ஒரு விசயம் புலனுறுப்புகளுக்கு இன்பத்தைத் தரக்கூடியதாக இருக்கிறது என்பதால் மட்டும் அது ஹலாலானதாகவோ ஹராமானதாகவோ வெறுக்கத்தக்கதாகவோ விரும்பத்தக்கதாகவோ ஆகிவிடாது. இந்த இன்பத்தில் ஐந்து சட்டங்கள் இருக்கலாம். அது ஹராமானதாக இருக்கலாம்; அவசிய மானதாக இருக்கலாம்; வெறுக்கத்தக்கதாக இருக்கலாம்; விரும்பத் தக்கதாக இருக்கலாம்; அனுமதிக்கப்பட்டதாக இருக்கலாம். ஆகவே, ஆதாரத்திற்கான நிபந்தனைகளையும் ஆதாரமாக முன்வைக்கப்படும் இடங்களையும் அறிந்தவர் இந்த ஒன்றைக் கொண்டு மட்டும் அதனை அனுமதிக்கப்பட்டது என்று எப்படிக் கூற முடியும்? இது விபச்சாரத்தில் இன்பம் இருக்கிறது என்பதற்காக அதனை அனுமதிக்கப்பட்டது என்று கூறுவதைப் போன்றதாகும். அதில் இருக்கக்கூடிய இன்பத்தை ஆரோக்கியமான எந்த மனிதனும் மறுக்க மாட்டான். ஒன்று இன்பமளிப்பதாக இருக்கிறது என்பதற்காக அது அனுமதிக்கப்பட்டதாக ஆகிவிடுமா? தடைசெய்யப்பட்ட விசயங்களில் பெரும்பாலானவை இன்பம் தரக்கூடியவைதாம். இசைக்கருவிகளின் இசை தடைசெய்யப்பட்டது என்று நபியவர் களிடமிருந்து அறிவிக்கப்படும் ஹதீஸ் ஸஹீஹானதாக இருக்க, அதனை யார் அனுமதிக்கப்பட்டதென கருத முடியும்? இன்பம் தரக்கூடியவை என்றாலும் அவற்றுள் சில இன்பங்கள் தடை செய்யப்பட்டுள்ளன என்பதில் அறிஞர்கள் அனைவரும் ஒருமித்த கருத்து கொண்டுள்ளார்கள். அ(ந்த வகையில் இசை போன்ற) வை முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளன என்று அவர்களில் பெரும்பாலோர் கூறுகிறார்கள்.'

பேரறிஞர் இப்னுல் ஜவ்சீ ﵀ தம்முடைய தல்பீஸு இப்லீஸ் என்ற நூலில் கூறுகிறார்: 'பாடல் கேட்பது இரண்டு விசயங்களை உள்ளடக்கியிருக்கிறது. ஒன்று, அது உள்ளத்தை அல்லாஹ்வின் மகத்துவம் குறித்து சிந்திக்க விடாமல் அலட்சியத்தில் ஆழ்த்துகிறது. இரண்டு, விரைவாகக் கிடைக்கக்கூடிய இன்பங்களின் பக்கம் அது இழுத்துக்கொண்டு செல்கிறது. அது புலனின்பங்கள் அனைத்தை யும் முழுமையாக அனுபவிக்கும்படித் தூண்டுகிறது. அவற்றில் பெரும்பாலானவை உடலுறவு தொடர்பானவை. அந்த இன்பங்கள் புதிய புதிய பெண்கள் கிடைத்தால் அன்றி முழுமையடையாதவை. ஹலாலான வழியில் அதிகமான புதிய பெண்களைப் பெற முடியாது. ஆகவே, அது விபச்சாரத்தின் பக்கம் தள்ளுகிறது. விபச்சாரத்திற்கும்